**OS.No.188/2024, Dated 16.09.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 16th day of Sep 2025.

**வா.சா3 – தீபா க/பெ. ரமேஷ் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பிரமாண வாக்குமூலத்தை நான் தான் தாக்கல் செய்தேன். அதை நான் படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லி தான் தயார் செய்தார்கள். எந்த தேதியில் பிரமாண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது என்றால் 6ம் மாதம் தயாரிக்கப்பட்டது. தேதி ஞாபகம் இல்லை. எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் வக்கீல் வீட்டில் வைத்து தயாரிக்கப்பட்டது. தயாரித்த உடனே நான் அதில் கையொப்பம் செய்து விட்டேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 12ம் வகுப்பு வரை வந்தவாசி, அரசினர் பெண்கள் மேல்நிலை பள்ளியில் படித்தேன். நான் பள்ளி படிக்கும்போது வந்தவாசியில் தான் தங்கியிருந்தேன் என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு படிப்பு படிக்கும்போதிருந்து வந்தவாசியில் தங்கியிருந்தேன். எனது தகப்பனார் கிராம நிர்வாக அலுவலராக இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு பணிமாறுதல் ஏற்படும்போது அவர் பணி செய்யும் ஊரில் சென்று படிப்பேன் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், தம்பி மற்றும் தங்கை ஆவார். என்னுடன் சேர்த்து என்னுடன் பிறந்தவர்கள் நான்கு பேர்கள். எனது தந்தைக்கு இரண்டு மனைவிகள். எனது தாயாருக்கு என்னுடன் சேர்த்து மூன்று பிள்ளைகள். முதல் மனைவிக்கு எனது அண்ணன் மட்டும் பிள்ளை ஆவார். எனக்கு 2002ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். எனது மூத்த மகள் இறந்துவிட்டார். அவர் தற்போது இருந்தால் அவருக்கு 21 வயதிருக்கும். மற்றொரு மகள் 11ம் வகுப்பும், இளைய

மகள் 7ம் வகுப்பும் படிக்கிறார். பொதுவாக பள்ளி ஜீன் மாதம் முதல் வாரத்தில் திறக்கப்படும் என்றால் சரிதான். பிள்ளைகளுக்கு பள்ளி திறந்து விட்டால் நான் அவர்களை பாராமரிப்பதில் நேரத்தை செலவிடுவேன் என்றால் சரிதான். நான் எனது தந்தையிடம் பிரதிவாதி வாங்கிய பணம் குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் யார் யாருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுந்தரம், குணசேகரன் மற்றும் அவரது தகப்பனார் தனபால் கவுண்டருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. புரோ நோட் எந்த தேதியில் எந்த கிழமையில் போட்டார்கள் என்றால் 06.06.2019 அன்று எழுதப்பட்டது. எந்த கிழமை என்று எனக்கு ஞாபகம் இல்லை. வியாழக்கிழமையா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு புரோ நோட் எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எங்கு வைத்து புரோ நோட் எழுதப்பட்டது என்றால் எனது தந்தை ஊரானா தாளம்பள்ளத்தில் வைத்து எழுதப்பட்டது. புரோ நோட் குறித்து அனைத்தும் எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இருக்கிறது. எனது வீடு வந்தவாசியில் உள்ளது. எனது பிள்ளைகள் அகஸ்தியா பள்ளி, வந்தவாசியில் படிக்கிறார்ள். 04.06.2019 எனது பிள்ளைகளுக்கு பள்ளி இருந்ததால் நான் தாளம்பள்ளத்திற்கே செல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் என்னால் நேரம் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருடன் யார் யார் தங்கியிருக்கிறார்கள் என்றால் எனது தாய், தந்தை மட்டும் தான் உள்ளார். எனது தகப்பனார் வட்டி தொழில் செய்கிறாரா என்றால் இல்லை யாராவது கடன் கேட்டால் கொடுக்கும் வழக்கம் மட்டும் உள்ளது. அவர் பல நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளார். அவர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் இல்லை. தாவா கடனுறுதி சீட்டின் படி வாதி ரூ.7,00,000/-த்தை பணமாக கடன் கொடுத்துள்ளார். பணத்தை எனது தந்தை தான் எண்ணி பார்த்தார் நான் எண்ணி பார்க்கவில்லை. பணத்தை எனது தந்தை சுந்தரத்திடம் கொடுத்தார். பணம் கொடுக்கும்போது, குணசேகரன், குணசேகரின்

தந்தை தனபால், சுந்தரம், எனது தாய், தந்தை, வரதன் மற்றும் பழனி கவுண்டர் மற்றும் எனது பிள்ளைகள் மூன்று பேர் அங்கு இருந்தார்கள். நான் வழக்கிற்காக என் பிள்ளைகள் அங்கு இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வரதனும் நானும் ஒரே மாதிரியாக தான் சாட்சியம் அளிக்க வேண்டுமென்றால் அவர் நினைவில்லாமல் வேறு விதமாக சொல்லியிருக்கலாம். வரதன் வேறு விதமாக சொல்லியுள்ளாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரு நிகழ்வு நடந்தால் அங்கு இருக்கும் இரு நபர்களும் ஒரே மாதிரி தான் அது குறித்து சொல்ல வேண்டும் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. எனது தந்தை மீது நான் மிகுந்து பாசத்துடன் உள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு எதிராக நான் எதுவும் செய்ய மாட்டேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் Interested Witness என்பதால் எனது தகப்பனாருக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க மாட்டேன் என்றால் சரியல்ல. ரூ.2,00,000/-க்கு மேல் பணமாக கொடுப்பது வருமான வரிச்சட்டத்தின் கீழ் குற்றம் என்றாலும், அத்தகைய குற்ற செயல் நடக்கும்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரியல்ல. அது குற்ற செயலா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை வருமான வரி செலுத்துபவர் இல்லை என்றபட்சத்தில் அவர் ரூ.7,00,000/- பணம் வைத்திருந்தார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. அவர் வருமான வரி செலுத்திய விபரங்கள் குறித்தும் எனக்கு தெரியாது. 7 லட்சம் பணம் வைத்திருக்கும் அளவிற்கு எனது தந்தைக்கு வசதி இருந்தது என்று ஆதாரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் எப்போதும் பணிக்கு சென்றதில்லை. பழனி என்பவரின் வீட்டு விலாசம் எனக்கு தெரியாது. அவரது பெயர் எனது தகப்பனார் சொல்லி தான் தெரியும். பழனி என்பவரின் பெயர் நினைவில் இருக்கும்போது புரோ நோட் எழுதப்பட்ட நேரம் நினைவில்லையா என்றால் நினைவில்லை. அது தட்டச்சு செய்யப்பட்ட புரோ நோட்டா என்று நான் சரியாக கவனிக்கவில்லை. அந்த புரோ நோட்டு முத்திரை தாளில் எழுதப்பட்டிருந்ததா

அதில் முத்திரை வில்லை ஒட்டப்பட்டிருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. சாட்சி பின்னிட்டு முத்திரை தாளில் எழுதவில்லை. முத்திரை வில்லை இருந்தது என்று சொன்னார். புரோ நோட்டில் எத்தனை முத்திரை வில்லை இருந்தது என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. அந்த முத்திரை வில்லையில் யார் யார் எத்தனை முறை கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சுந்தரம் மற்றும் குணசேகரன் ஒரு முறை கையெழுத்து போட்டுள்ளார்கள். எனது அண்ணன் முதல் சாட்சியாகவும், நான் இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் போட்டோம். பழனி பாண்டு எழுதியவர் அவரும் கையெழுத்தி போட்டார். அவரது விலாசம் தான் எனக்கு தெரியாது. அவர் பாண்டு எழுதுபவர் என்று எனக்கு தெரியும். அனைவரும் ஒரே பேனாவில் தான் எழுதி கையெழுத்து போட்டோமா என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு புரோ நோட் குறித்து எந்த விபரமும் ஞாபகம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் தனபால் கவுண்டர் வந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுந்தரமும், குணசேகரனும் எப்போதோ பிரிந்து விட்டார்கள் என்றாலும், இருவரும் சேர்ந்து வந்து பணம் வாங்க வாய்ப்பிளல்லை என்றால் சரியல்ல. அவர்கள் கூட்டுக்குடும்பமாக இல்லாதபோது, அவர்கள் சேர்ந்து கடன் வாங்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு ஆதரவாக நிறைய விஷயங்கள் ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வாக்குமூலம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால்சரியல்ல. அதனால் எனது வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. புரோ நோட்டில் Interested Witness டம் மட்டும் கையொப்பம் பெறப்பட்டுள்ளதிலிருந்தே அது பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. 06.06.2019 அன்று சுந்தரம் எனது தந்தையின் வீட்டிற்கே வரவில்லை என்றால் சரியல்ல. அவர் எனது தந்தையிடம் பணமும் பெறவில்லை என்றால் சரியல்ல. புரோ நோட்டில் உள்ள

கையெழுத்தும் அவருடையது இல்லை என்றால் சரியல்ல. அவர் எனது தந்தையிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.09.16 18:36:27 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்